முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

**எதிர்காலம் குறித்த**

**இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வு குறித்த**

**மகான் சுப்பிரமணியரின் ஆசி நூல்**

**(விளம்பி ஐப்பசி மாதம் 18ம் திகதி முதல் ஐப்பசி மாதம் 25ம் திகதி வரை**

**நவம்பர் 4ம் திகதி முதல் நவம்பர் 11ம் திகதி வரை)**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

**1.** **ஆலயங்கள் சூழ அருளாய்**
**ஆற்றல்பட தெய்வ சக்தி மிகுந்த**
**கழனி கொஞ்சும் செந்தமிழகமே**
**கண்ணியமிக்க கூட்டிணைவு கொண்ட**

**2.** **கொண்டநல் தாய் பாரதமே**
**குவலயத்தில் இந்தியா தமிழகத்தில்**
**உண்டான விளம்பி ஐப்பசியில்**
**உயர்வான மூவாறு திகதி மேல் இருபானை திகதிவரை**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள் 04.11.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 25ம் நாள் 11.11.2018, ஞாயிறு முடிய)**

**3.** **வரையிலான இந்த வார நிகழ்வாக**
**வழங்குவேன் எதிர்கால பலனாக**
**வார ஆசியாக சுப்பிரமணியரும்**
**வழங்குவேன் அரங்க ஞானி கேட்க**

**4.** **கேட்கவே தமிழகம் தன்னில்**
**கேட்டிடுவாய் கழனி பூமியதும்**
**மாட்சிமைபட காக்கப்படவே**
**மக்களின் வாழ்வாதாரம் பெருகும்**

**5.** **பெருகவே மக்களின் நலம் கருதி**
**பெருமைமிகு அரச துறைகளும்**
**கருணை கொண்டு திட்டமிட**
**கண்ணியமாய் செயல்பாடு காண**

**6.** **காணவே மக்களின் தேவைகள்**
**காப்புடன் பூர்த்தி நிலை கண்டு**
**ஞானமுடன் எதிர்மறைகளில்லா**
**நல்ஆட்சியாக வளர மலர வகை செய்யும்**

**7.** **செய்யவே ஊழலை அகற்றி**
**சேவைகள் நிறைந்த நலப்பணிகள்**
**அய்யமற ஆளுமைகள் புரியவே**
**ஆறுமுகன் என் ஆசிபட தமிழகம் உயரும்**

**8.** **உயர்வு தரும் இந்தியப் பொருளாதாரம்**
**உயர்த்த பெரும் பங்காற்றும்**
**தயவுமிக்க தமிழகம் தானும்**
**தக்க நடுவண் அரசால் காக்கப்படவே**

9. காப்பதுடன் போற்றப்படவே மத்தியும்
கலியுகத்தில் சந்தை சரிவிலிருந்து
மீட்படையும் மேலான வளர்ச்சியுறும்
மாறுதலிலா நிலைகள் தொடர்ந்தால்

10. தொடர்ந்தால் மத்திய தென் மாநில
தேசங்கள் வளர்ச்சிநிலை காணா
இடர்பட நேரும் பின்னடைவாக
இனிதே உலகளவில் நிலையுயர

11. உயர ஆளுமைகள் எங்கும்
உயர் சிந்தைபட செயல்பாடு
தயவாக நடக்க வேண்டும்
தருமமாக வளர்ச்சி பணிகள் சிறக்க

12. சிறக்கவே ஆளுமை சக்திகள்
சிந்தை தெளிவு ஞானமுற
மறுக்கா அரங்கமகா ஞானி
மலரடி பணிந்து தொடர ஞான ஆட்சியாகும் வார ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் சுப்பிரமணியர் அருளிய வார ஆசி நூலின் சாரம் :**

**இந்தியா தமிழகம் தன்னில் விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள் 04.11.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 25ம் நாள் 11.11.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நடக்க இருக்கும் நிகழ்வுகள்**

ஏராளமாய் தெய்வ ஆலயங்களை தன்னகத்தே கொண்டுள்ள தமிழகமே அருளால் ஆற்றல்பட தெய்வ சக்தியை மிகுதியாய் கொண்டிட்ட தமிழகத்தில் விளைநிலங்கள் செழிப்புடன் காணப்படுகின்ற செந்தமிழகம் கண்ணியமும் கட்டுப்பாடும் மிகுந்து பேதங்கள் மறைந்து கூட்டுறவாய் அனைத்து மக்களும் இந்தியர்கள் என்ற ஒருமித்த உணர்வுடன் ஒன்றிணைந்து வாழ்கின்ற தாய் பாரத நாட்டினில் விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 18ம் நாள் 04.11.2018, ஞாயிறு முதல் ஐப்பசி மாதம் 25ம் நாள் 11.11.2018, ஞாயிறு முடிய உள்ள ஒரு வார காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக சுப்பிரமணியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்.

மாட்சிமைமிக்க தமிழகத்தினில் விவசாய நிலங்களும் விவசாயிகளும் ஆளும் அரசால் பாதுகாக்கப்பட்டால் தமிழக மக்களின் வாழ்வாதாரம் பெருகிடும். அரசின் பெருமைமிக்க துறைகளெல்லாம் மனிதாபிமானத்துடன் நடந்து மக்கள் நலம் கருதி தயவு உணர்வுடன் திட்டங்களை வரையறுத்து செயல்பட்டால் தமிழக மக்களின் தேவைகளெல்லாம் பாதுகாப்புடன் நிறைவேற்றப்பட்டு மக்களின் தேவைகளெல்லாம் பூர்த்தியாகி நல் ஆட்சியாக வளரவும், மேம்பாடு அடையவும் வகை செய்திடும்.

தமிழகத்தினில் நல்லாட்சியாக அமைந்திட தமிழகத்தில் உள்ள ஊழலை அகற்றி சேவைகள் நிறைந்த நலப்பணிகளை பயமின்றி தெளிவாக ஆட்சியில் உள்ளோர் செய்திட முருகப்பெருமான் எமது ஆசிகளை தமிழகம் பெற்று உயர்வடையும்.

இந்தியப் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கு பெரும் பங்காற்றி வருகின்ற தயவுமிக்க தமிழகம் மத்திய அரசினால் பாதுகாப்பாக ஆதரவாக நடத்தப்பட்டால் மத்திய அரசும் தான் சந்தித்துள்ள சந்தை சரிவிலிருந்து மீண்டு வரும், மீட்சியடைவதோடு மட்டுமில்லாமல் மேன்மேலும் உயர்நிலைக்கு செல்லும்.

அவ்வாறின்றி மத்திய அரசு தமிழக அரசினை பாதுகாக்காமல் விட்டுவிடுமேயானால் தென் மாநிலங்களின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு வளர்ச்சியடையாமல் துன்பங்களை அம்மாநிலங்கள் சந்திக்க நேரும். இந்திய தேசமும் உலக அரங்கில் பின்னடைவை சந்திக்கும்.

ஆதலினால் உலகளவில் இந்தியா தனது நிலைப்பாட்டை உறுதிப்படுத்திக் கொள்ள விரும்பினால் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள் எல்லாம் தயவுடன் நடந்து உயர்ந்த சிந்தனைகளோடு செயல்பட வேண்டும். மற்றைய மாநில அரசுகளிடம் தயவாக நடந்து கொள்ள வேண்டும். தரும செயல்களை ஊக்குவிக்க வேண்டும்.

நாட்டின் வளர்ச்சி பணிகள் சிறப்படைய வேண்டுமாயின் ஆட்சி பொறுப்பில் உள்ளவர்கள் தெளிந்த சிந்தனைகளை உடையவராய் ஆகிட வேண்டும். ஆதலால் ஆட்சி பொறுப்பில் உள்ளோர் தெளிந்த சிந்தையும் உண்மை ஞானமும் உடைய கலியுக மாற்ற தலைவன் ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியை கண்டு தரிசித்து திருமலரடி பணிந்து அரங்கன் உபதேசம் ஏற்று அதைப் பின்பற்றி அரங்கனை பின் தொடர்ந்து நடந்து வர நாட்டின் ஆட்சியானது தூயஆட்சியாக தர்மஆட்சியாக ஞானஆட்சியாக மாறிடும் என தமது வார ஆசி நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் சுப்பிரமணியராகிய முருகப்பெருமான்

–சுபம்–